மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டு அந்தப் பள்ளி தரம் உயர்த்துவதற்கான பரிசீலனையில் உள்ளதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

திரு. ச. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் தரம் உயர்த்துவதற்கான பரிசீலனையில் உள்ளதென்று கூறிய மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 267, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

267—

ஆரம்ப சுகாதார நிலையம்

***21657—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஊராட்சி ஒன்றியம், நூலஅள்ளியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊராட்சி ஒன்றியம், நூலஅள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி ஒன்றியம், நூலஅள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதத்திற்கு 30 முதல் 40 பிரசவங்கள் நடைபெறுகின்றன. ஒரு நாளைக்கு 150 முதல் 200 நபர்களுக்கு சிகிச்சை பார்க்கப்படுகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவு நேரங்களில் மருத்துவர்கள் இல்லை. ஐந்து ஊராட்சிகளுக்குட்பட்ட இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊராட்சி ஒன்றியம், நூலஅள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இதுதவிர, தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தில் துரிஞ்சிப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும், சோலைக்கோட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன. நூலஅள்ளி கிராமத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் லலிகம் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அதேபோன்று, 7 கி.மீ. தொலைவில் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி அரசு மருத்துவமனை உள்ளது. 10 படுக்கை வசதிகளைக் கொண்ட நூலஅள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தினசரி சராசரியாக 100 முதல் 110 வெளி நோயாளிகளும், மாதம் ஒன்றுக்கு சாராசரியாக 60 முதல் 70 வரை உள் நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். மேலும், மாதம் ஒன்றுக்கு 20 முதல் 25 வரை பிரசவங்கள் நடைபெறுகின்றன. மேலும், நூலஅள்ளி ஆரம்ப சுகாதார நிலைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், 2010-2011 ஆம் நிதியாண்டில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பிரசவ பின் கவனிப்பு அறையும், 2011-2012 ஆம் நிதியாண்டில் ரூ.5 இலட்சம் மதிப்பில் தடுப்பூசி அறையும் கட்டப்பட்டு தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. அதுமட்டுமல்லாமல், கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மா

2013 ஏப்ரல் 18]

அவர்களுடைய அரசால் தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள டி.துரிஞ்சிப்பட்டி, பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இதே ஊராட்சி ஒன்றியத்தில் நூலஅள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ளதால், இதனை தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலஅள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செவிலியர் தங்கும் விடுதி ஒன்று கட்டப்பட வேண்டும். சுற்றுச்சுவர் கட்டித்தரப்பட வேண்டும். இரவுக் காவலர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். மாதேமங்களம் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தித்தர வேண்டும். பாளையம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு நாளைக்கு பத்துக்கும் மேற்பட்ட பிரசவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவு நேரங்களில் டாக்டர்கள் இல்லாததனால், அங்குள்ள மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இரவு நேரங்களில் மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லாததனால், அங்குள்ள மக்கள் தருமபுரிக்குத்தான் வரவேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. இதனால், பாளையம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரவு நேர மருத்துவர்களை பணியமர்த்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நூலஅள்ளியில் மருத்துவர்கள் இல்லை என்ற குறைபாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். மருத்துவ அலுவலர்கள் இரண்டு பேரும், மருந்தாளுநர் ஒருவரும், ஆய்வக நுட்பினர் ஒருவரும், துணைச் செவிலியர் ஒருவரும், செவிலியர் மூன்று பேரும், கிராமச் சுகாதாரச் செவிலியர்கள் 6 பேரும், பகுதி சுகாதார செவிலியர் ஒருவரும், மருத்துவப் பணியாளர்கள் 2 பேரும், சுகாதார ஆய்வாளர்

ஒருவரும், ஆக மொத்தம் 18 பேர், நூலஅள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், அவர் துணைக் கேள்வியாக, பாளையம்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் இல்லை என்ற குறையையும் தெரிவித்திருக்கிறார்கள். அவர் எழுப்பியிருக்கக்கூடிய அந்தக் கூடுதல் வினாவிற்கு துறையின்மூலம் ஆய்வு செய்து, அவர் சொல்வதுபோல், அந்தப் பகுதிக்கு மருத்துவர்கள் வரவில்லை என்றால், உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்ற செய்தியினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தே.மு.தி.க. உறுப்பினர்களுக்கு மானியக் கோரிக்கை விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசும் வாய்ப்பு வழங்கியதற்கு நன்றி

திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் தாராள மனதோடு மீண்டும் எங்களுக்கு உரிய இடத்தை தங்களுடைய தீர்ப்பின்மூலம் நேற்று வழங்கியிருக்கிறீர்கள். அதற்காக எங்களுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் என்பார்கள். அதைப்போல மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தாங்கள் அந்த முடிவை எடுத்ததற்குத் தூண்டுகோலாக இருந்திருக்கிறார்கள் என்பதைக் கருதுகிறபோது, உண்மையிலேயே நாங்கள் பெருமைப்படுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சான்றாண்மையோடு அணுகியிருக்கின்றார்கள். ஒரு கன்னத்தில் அறைந்தால், மறு கன்னத்தைத் காட்ட வேண்டும் என்றார் ஏசுபிரான். ஆனால், அதற்கும் மேலாக திருவள்ளுவர் சொல்கிறார்,

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?"